### ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் – துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து –

# தமிழ்நாடு முழுவதும் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாலை 4 மணியளவில் நடைபெறுகிறது!

**சென்னை, பிப்.12 -**

**ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் - அதற்கு ஒத்து ஊதி துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில், இன்று (பிப்ரவரி 12 - வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் தமிழ்நாடு முழுவதும் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.**

**இந்த ஆர்ப்பாட்டம் குறித்து - மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு :-**

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப் பட்டுள்ளதற்கு எதிராகவும் நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து தமிழ்நாட்டின் அனைத்து மாநகரங்களில் தலா ஒரு இடத்திலும் மற்றும் கழக ஒன்றியம், நகரம், பேரூர் அளவிலும் இன்று (**12.02.2026 - வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி** சார்பில் **"மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்"** நடைபெறும்.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி ரூ.3458 கோடி, நூறு நாள் வேலை திட்ட நிதி ரூ.2000 கோடி, குடிநீர் இணைப்பு திட்ட நிதி ரூ.3,112 கோடி உள்ளிட்ட எந்த நிதியையும் விடுவிக்காமலும் வளர்ச்சி திட்டத்திற்கு ஒரு பைசா கூட ஒதுக்காமலும், தமிழ்நாட்டு மக்களைப் புறக்கணித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

தமிழ்நாட்டிற்கான நிதியும் இல்லை வளர்ச்சித் திட்டமும் இல்லை என ஒன்றிய அரசு கைவிரித்த போதும் அவர்களது காலில் விழுந்து ஆதரித்துள்ளது அடிமை அ.தி.மு.க.

நிதி மறுப்பு ஒருபுறம் என்றால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைத்து, நூறு நாள் வேலையையே இனி இல்லாமல் செய்து கிராம மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சட்டத்தை திரும்பப்பெறவோ, அதற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கவோ செய்யாமல் ஏழை எளிய மக்களின் வயிற்றில் அடித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. அதோடு அமெரிக்காவின் விவசாயம் சார்ந்த பொருட்களை இங்கே இறக்குமதி செய்து விற்க ஒப்புக்கொண்டு நமது விவசாயிகளின் வாழ்வையே கேள்விக்குறியாக்கி உள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

ஒரே நேரத்தில் 100 நாள் வேலை ஒழிப்பு சட்டம், விவசாயத்தை அழிக்கும் ஒப்பந்தம் என கிராமப்புற மக்கள் மீது இரட்டை அணுகுண்டு தாக்குதல் நடத்தி உள்ளது ஒன்றிய பாஜக அரசு. இதற்கு உறுதுணையாக இருந்து துரோகம் செய்து வருகிறது அ.தி.மு.க.

நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம், புது புது சட்டங்கள், ஒப்பந்தங்கள் வழியே மக்களை வஞ்சிப்பது, நம் வளர்ச்சியைத் தடுத்து வீழ்ச்சியில் தள்ள துடிப்பது என அநீதி இழைத்து வரும் ஒன்றிய பா.ஜ.க.வை எதிர்த்தும், அதோடு கூட்டு சேர்ந்து டப்பா எஞ்சின் மூலம் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களையும் டெல்லியின் அடிமையாக்கத் துடிக்கும் அடிமை அ.தி.மு.க.வைக் கண்டித்தும் **மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் அனைத்து மாநகரங்களிலும் தலா ஒரு இடத்திலும் மற்ற இடங்களில் கழக நகர, ஒன்றிய, பேரூர் அளவிலும் கண்டன ஆர்ப்பாட்டம்** நடைபெறும்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினருடன் இணைந்து மாவட்டச் செயலாளர்கள் - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!**

இவ்வாறு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

---

### "சுவமித்வா" ஊரக நில அளவை திட்டம்

# எல்லா மாநிலங்களிலும் எப்போது செயல்படும்?

## மக்களவையில் டி.ஆர்.பாலு கேள்வி!

புதுடெல்லி, பிப்.12-

"சுவமித்வா" என பெயரிடப்பட்டுள்ள ஊரகப் பகுதிகளில் துவக்கப்பட்ட நில அளவைத் திட்டத்தின் நவீன தொழில்நுட்பக் கூறுகளின் விவரங்கள் என்ன? இதுவரை நாடுமுழுவதும் எத்தனை பேர்களுக்கு சொத்துரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது? அனைத்து மாநிலங்களிலும் எப்போது முதல் இந்த திட்டம் செயலாக்கத்திற்கு வரும் என பல்வேறு விவரங்களைக் கேட்டு நேற்று முன்தினம் நாடாளுமன்ற மக்களவையில் கழகப் பொருளாளரும் மக்களவை தி.மு.க. குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பினார். இதற்கு ஒன்றிய பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் லலன் அவர்கள் நேற்று முன்தினம் (10.2 2026)பதில் அளித்தார்.



**நவீன தொழில்நுட்பம்சார் "சுவமித்வா" திட்டம்**

நாட்டின் கிராமங்களில் உள்ள குடியிருப்பு பகுதிகளை அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி துல்லியமான நில அளவை செய்து வீட்டுரிமையாளர்களுக்கு சொத்து அட்டைகளை மாநில அரசுகள் வாயிலாக வழங்கும் நோக்குடன் சுவமித்வா அதாவது மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப ஊரகக் குடியிருப்புக்கள் நிலஅளவை த் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. டிரோன்கள் துணையுடன் வானில் இருந்து, தொடர்ந்து இயங்கும் நிரந்தர நெட்ஓர்க் வலைத்தொகுப்பு நிலையங்கள் உதவியுடன் நில அளவைகள் மேற்கொள்ளப் படுவதால், மிகத்துல்லியமாக ஐநூறுக்கு ஒன்று ( 1:500) அளவியில் சொத்துக்களின் எல்லைகள் உருவாக்கப் படும். நில அளவையின் நம்பகத்தன்மை ஊராட்சி அலுவலர்கள் உதவியுடன் மேலும் சரிபார்க்கப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன. அதன்பின்னர் உரிமையாளர்களுக்கு சொத்து அட்டை சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் மூலமாக வழங்கப்படும்.

**தமிழ்நாட்டில் செயல்படவில்லை!**

அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் தனது பதிலில் 31 மாநிலங்கள் மற்றும் ஒன்றிய பிரதேசங்களில் இத்திட்டம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது எனவும் இதுவரை நாடுமுழு வதும் மொத்தம் 1.86 லட்சம் கிராமங்களில் 3.06 கோடி சொத்து அட்டைகள் உருவாக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆனால், தமிழ்நாடு, டெல்லி, அசாம், ஜார்க்கண்ட், தெலுங்கானா, சிக்கிம், கேரளா உள்ளிட்ட ஏழு மாநிலங்களில் இந்த சுவமித்வா ஊரக குடியிருப்பு பகுதிகள் நவீன நில அளவை திட்டம் செயல்படுத்தப்பட வில்லை எனவும் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

---

### "தமிழ்நாடு தலைகுனியாது"

# விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் பரப்புரை!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் – தயாநிதி மாறன் எம்.பி பங்கேற்பு!

*விழுப்புரம்,பிப்.12-*

*முதலமைச்சர், கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, 13.02.2026 வெள்ளிக்கிழமையன்று வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், மண்டலப் பொறுப்பாளருமான எம். ஆர்.கே. பன்னீர்செல்வம், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன், எம்.பி ஆகியோர் விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் பல்வேறு பரப்புரை நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்.*

*அதன் விபரம் வருமாறு:*

*கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் 13.02.26 வெள்ளிக்கிழமையன்று "தமிழ்நாடு தலைகுனியாது" என்ற பரப்புரை நிகழ்ச்சி விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் நடைபெறுகிறது. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், மண்டலப் பொறுப்பாளருமான எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளருமான தயாநிதி மாறன், எம்.பி ஆகியோர் இதில் பங்கேற்கவிருக்கின்றனர். முதல் நிகழ்ச்சியாக விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் உள்ள தனலட்சுமி திருமண மண்டபத்தில் முக்கிய பிரமுகர்கள், மாணவர்கள், ஆசிரியர் பெருமக்கள், தொழில் முனைவோர், தன்னார்வ அமைப்புகள் உள்ளிட்டோர் பங்கேற்கும் கலந்தாய்வுக் கூட்டமும், பின்னர் கழகத்தின் மூத்த முன்னோடிகளை அவர்களது இல்லத்தில் சந்தித்து உரையாடுதல் நிகழ்ச்சியும், மாலையில் திருவண்ணாமலை சாலை, கலைஞர் திடலில் மாபெரும் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.*

*இதற்கான ஏற்பாட்டை விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், செஞ்சி சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மஸ்தான் செய்து வருகின்றார்.*

---

### தமிழ்நாடு அரசின் முன்னோடித் திட்டம் "உலகம் உங்கள் கையில்"

# திருவள்ளூர் மாவட்டத்தில் 9425 மாணவ - மாணவியர்களுக்கு மடிக்கணினிகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்!

*திருவள்ளூர், பிப் 12;*

*தமிழ்நாடு அரசின் முன்னோடி திட்டமான "உலகம் உங்கள் கையில்" உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தில் 102 தனியார் கல்லூரிகளைச் சேர்ந்த 9425 மாணவமாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கும் விழா திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், திருப்பாச்சூர் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.*

*இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் வழங்கி சிறப்புரையாற்றினார்.*

*அப்போது அமைச்சர் சா.மு. நாசர் பேசியதாவது:*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும், துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் தலைமையில், தமிழ்நாடு அரசின் முன்னோடி திட்டமான உலகம் உங்கள் கையில்" என்ற நிகழ்ச்சியின் கீழ், உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் 05.01.2026 தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு முழுவதும்துவக்கப்பட்டது.*

*கல்வி அனைவருக்கும், உயர்வு ஒவ்வொருவருக்கும் என்ற நோக்கத்துடன் தொழில்நுட்ப அறிவியலை வலுப்படுத்த டெல், ஏசர் போன்ற உலகத்தரமான நிறுவனங்களின் மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த மடிக்கணினிகளில் பல்வேறு மென்பொருள்கள் நிறுவப்பட்டுள்ளன.*

*நடைமுறையில் உள்ள கல்வி மற்றும் திட்டப் பணிகளுக்காக எம்.எஸ். ஆபீஸ் 365, செயற்கை நுண்ணறிவு மென்பொருள் 6 மாதசந்தாவும் கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது. இது தவிர உயர்தர மடிக்கணினி பையும் வழங்கப்படுகிறது.*

*டிஜிட்டல் திறன் மேம்பாடு மூலம் மாணவர்கள் தகவல் தொழில்நுட்ப துறை, மென் பொருள் உருவாக்கம், தரவு உள்ளீடு, டிஜிட்டல் சந்தைப் படுத்தல். வரைகலை வடிவமைப்பு, குறியிடுதல், வலை வடிவமைப்பு. செயற்கை நுண்ணறிவு கருவிகள் போன்ற துறைகளில் புதிய வேலைவாய்ப்புகளைப் பெறும் புதிய தலை முறை என்ற அளவில் தகுதியானவர்களாக மாணவர்களை மாற்ற உதவுகிறது. இதனால் குடும்ப வருமானம் உயர்ந்து, கிராம நகர இடைவெளி குறைந்து, தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய தொழில் முயற்சிகளும் உருவாகும் வாய்ப்பு அமையும். உலகம் உங்கள் கையில் என்ற திட்டம் தமிழ்நாட்டின் மாபெரும் டிஜிட்டல் கனவையும் நனவாக்கும் வரலாற்றுப் பெருமைகள் சேர்க்கும் மாபெரும் கல்விப் புரட்சித் திட்டமாகும்.*

*திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் 26876 மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். மாணவர்கள் அனைவருக்கும் நல்ல எதிர்காலம் அமைய எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன் என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கூறினார்.*


*இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.இராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி , டி.ஜே.கோவிந்தராஜன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் வை. ஜெயகுமார், திருவள்ளூர் நகர்மன்ற தலைவர் பா.உதயமலர் பாண்டியன்; உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) யுவராஜ், உதவி இயக்குநர் மோகன் , மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ. ரமேஷ், இ.குருதாஸ், பா. நரேஷ் குமார், டி.மோதிலால், கூளூர் எம்.ராஜேந்திரன், ப.ச.கமலேஷ், எஸ். மகாலிங்கம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்லூரி பேராசிரியர்கள், திரளான மாணவமாணவியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.*



திருவள்ளூர் அடுத்த திருப்பாச்சூர் தனியார் திருமண மண்டபத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தமிழ்நாடு அரசின் முன்னோடி திட்டமான "உலகம் உங்கள் கையில் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தில் 102 தனியார் கல்லூரிகளைச் சேர்ந்த 9425 மாணவமாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் திருத்தணிஎஸ்.சந்திரன், வி.ஜி.இராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜே.கோவிந்தராஜன், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வை.ஜெயகுமார், திருவள்ளூர் நகர்மன்ற தலைவர் பா.உதயமலர் பாண்டியன், ஒன்றிய செயலாளர் டி.மோதிலால் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்லூரி பேராசிரியர்கள், திரளான மாணவ மாணவியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

---

# தமிழ்த்தாய் வாழ்த்து!



"மகளிர் உரிமைத் தொகை"

"மகளிர் விடியல் பயணம்"

"புதுமைப்பெண் திட்டம்"

"தாயுமானவர் திட்டம்"

"நான் முதல்வன் திட்டம்"

"காலை உணவுத் திட்டம்"

இன்னும்

இன்னுமாக

எண்ணில்லா திட்டங்களால்

எளிய மக்களின் இன்னல் தீர்த்து

இந்தியாவின்

தலை சிறந்த மாநிலமாக

தமிழ்நாட்டை

தலைநிமிரச் செய்திருக்கும்

'திராவிட மாடல்' நாயகர்

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின்

ஒய்வற்ற உழைப்புக்கு

ஒப்பற்ற தொண்டூழியத்திற்கு

தமிழ்நாட்டு மக்கள் செலுத்தும்

நன்றிக் காணிக்கையாக

பாராட்டுப் பதக்கமாக

இருக்கப் போகிறது

2026-சட்டமன்றத் தேர்தலில்

இருநூறு தொகுதிகளையும் கடந்து

திமுக ஈட்டவிருக்கும் இமாலய வெற்றி..

ஆம்

**"வேண்டும்**

**ஸ்டாலின்**

**மீண்டும்**

**ஸ்டாலின்"**

என்பதே

ஏப்ரல் மாதத்து

ஒட்டுப்பதிவு எந்திரங்களின்

தமிழ்த்தாய்

வாழ்த்தாக

இருக்கப்

போகிறது...

**என்னநாஞ் சொல்றது!**



**மருது. அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்குழு துணைத் தலைவர்